# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பகிரங்க சேவை சேமலாப நிதியம் (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2003 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பகிரங்க சேவை சேமலாப நிதியம் (திருத்தச்) சட்டம்

*[2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் 4 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ. ஓ. 93/2002*

### பகிரங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பகிரங்க சேவை சேமலாப நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பகிரங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 434 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(4ஆ) அரசாங்க சேவையில் ஓய்வூதியமற்ற பதவியொன்றை வகிக்கின்றவரும் நாளாந்தக் கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவருமான ஆள் ஒருவர் தொடர்பில் —

(அ) அத்தகைய ஆளுக்கு, பஞ்சாங்க மாதமொன்றில் அல்லது அதன் பாகமொன்றில் செய்யப்பட்ட நாளாந்தக் கொடுப்பனவுகளின் மொத்தம் ; அல்லது

(ஆ) அக்காலப்பகுதிக்கெனச் சம்பளத்துக்குப் பதிலாக, அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்பட்ட மாதாந்தப் படி,

அத்தகைய ஆளின் மாதாந்தச் சம்பளமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மை சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2அ) இரண்டாம் பிரிவின் (4ஆ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓய்வூதியமற்ற தொழிலாளர் ஒருவரின் கட்டாய உதவுதொகையானது, மேற்கூறப்பட்ட உட்பிரிவுக்கு அமைவாக அத்தகைய ஆளினால் பெறப்பட்ட மாதாந்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, உதவுதொகை செலுத்துநர் ஒருவர் இறந்ததன் மேல்—

(அ) எத்தொகைக்கு மேலாக மரணசாதன வழக்கு நடவடிக்கைகளைத் தொடக்கவேண்டியது கட்டாயமானதாகவுள்ளதோ அத்தொகையாக இருக்கின்ற, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் மூலம் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையாக அல்லது அப்பணத் தொகையின் பெறுமதியை விஞ்சாததாக, கொடுபடற்பாலதான பணத்தொகை இருக்குமாயின், ஓய்வூதியப் பணிப்பாளர், அத்தகைய நோக்கத்துக்காக மரணமெய்திய உதவுதொகை செலுத்துநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு, அத்தகைய தொகையை, விதித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்துதல் வேண்டும். அத்தகைய பெயர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லையாயின், அத்தகைய பணத்தொகை, அதனைப் பெறுவதற்குச் சட்டப்படி உரித்துடைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு ஓய்வூதியப் பணிப்பாளரால் கொடுக்கப்படலாம் அல்லது மரணமெய்திய உதவுதொகை செலுத்துநரின் மரணச்சொத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளவிடத்து, அவ்வழக்கின் வரவுக்கு அப்பணத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும் :

(ஆ) எத்தொகைக்கு மேலாக மரணசாதன வழக்கு நடவடிக்கைகளைத் தொடக்கவேண்டியது கட்டாயமானதாகவுள்ளதோ அத்தொகையாக இருக்கின்ற (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை

யின் ஏற்பாடுகள்மூலம் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையின் பெறுமதியை விஞ்சுவதாக, கொடுபடற்பாலதான பணத்தொகை இருக்கு மாயின், ஒய்வூதியம் பணிப்பாளர் மரண மெய்திய உதவுதொகை செலுத்துநரின் மரணச் சொத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான மரணச் சொத்து வழக்கின் வரவுக்கு அப்பணத் தொகையைச் செலுத்துதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஓய்வூதியப் பணிப்பாளர் அவரது தற்றுணிபில், மரணச்சடங்குச் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக மரணமெய்திய உதவு தொகை செலுத்துநரின் வாழ்க்கைத்துணைக்கு அல்லது பிள்ளைகளுக்கு அல்லது வேறு தங்கிவாழு நர்களுக்கு உடனடி நிதி நிவாரணம் அத்தியாவசிய மானதெனத் தோற்றுகின்றவிடத்து, மரணமெய்திய உதவுதொகை செலுத்துநரின் வாழ்க்கைத்துணைக்கு அல்லது பிள்ளைகளுக்கு அல்லது வேறு தங்கிவாழுநர் களுக்கு, பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு பணத்தொகையைச் செலுத்தலாம்.".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.